**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS**

அசல் வழக்கு எண்**.17/2016** பி**.**சா**.1**

Name : திரு. செய்யது அபுதாகிர்

Father's name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.10.2024.

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கில் 1 ம் பிரதிவாதி மற்றும் எதிர் கோருரிமையாளர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் அறுபத்து ஆறு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

பி.சா.ஆ.1 வரிசை - நான் D.B.T.R National Hr. Sec. School, மயிலாடுதுறையில் வேலை பார்த்தற்கான பணி நியமன உத்தரவு மற்றும் சம்பள பட்டியல்

பி.சா.ஆ.2 வரிசை - நான் செயின்ட் மேரிஸ் மேல்நிலைப்பள்ளி மதுரையில் வேலை பார்த்ததற்கான பணி நியமன உத்தரவு மற்றும் சம்பள பட்டியல்

பி.சா.ஆ.3 வரிசை - நான் KNPM பள்ளியில் வேலை பார்த்ததற்கான பணி நியமன உத்தரவு மற்றும் சம்பள பட்டியல் மற்றும் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டதற்கான ஆணை

பி.சா.ஆ.4 - நான் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்று, அரசு உயர்நிலைப்பள்ளி, ஆர்.வெள்ளோடு, திண்டுக்கல் மாவட்டத்தில் பணியில் சேர்ந்ததற்கான பணி நியமன உத்தரவின் நகல்

(மேற்படி ஆவணம் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

பி.சா.ஆ.5 - பணியில் சேர்ந்த பின்பு இரண்டு ஆண்டுகள் கழித்து பணியை மன நிறைவளிக்கும் வகையில் தகுதிகாண்பருவம், முதன்மை கல்வி அலுவலரால் எனக்கு வழங்கப்பட்ட ஆணையின் நகல் (மேற்படி ஆவணம் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

பி.சா.ஆ.6 வரிசை - எனது மனைவிக்கு எடுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் (வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் மேற்சொன்ன ஆவணம் மருத்துவர் மூலமாக தான் குறியீடு செய்ய முடியும் என்று கூறி ஆட்சேபணை தெரிவித்ததால் ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)

பி.சா.ஆ.7 - எனது மனைவி பர்வீன்பானு பெயரில் 30.04.2009ம் தேதியன்று கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.8 - ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் நானும், எனது மனைவியும் கடன் பெற்றதற்கான Loan Sanction Letter

பி.சா.ஆ.9 - தாவா 3வது லக்கச் சொத்தை பொறுத்து எனது மனைவி பர்வீன்பானு பெயரில் 03.09.2009ம் தேதியன்று கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் (வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் மேற்படி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யாததால் ஆவணம் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்ததன் பேரில் ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்பட்டது). அதன் அசல் வங்கியில் உள்ளது.

பி.சா.ஆ.10 - எனது பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, அம்மன் சன்னதி மதுரை கிளையால் வழங்கப்பட்ட Loan Sanction Letter

பி.சா.ஆ.11 - எனது கனரா வங்கி கணக்கு புத்தகம்

பி.சா.ஆ.12 -மதுரை கல்வி கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றதை காட்டக் கூடிய எனது பெயரிலுள்ள கணக்கு புத்தகம்

பி.சா.ஆ.13 வரிசை - உசிலம்பட்டி பொதுபணியாளர் கூட்டுறவு சங்கத்தில்

நான் No objection கோரி கொடுத்த மனு, பணம் கட்டியதற்கான இரசீது மற்றும் கணக்கு பட்டியல்

பி.சா.ஆ.14 - எனது மனைவியின் பெயரில் மதுரை மாநகராட்சியால் கட்டிடம் கட்ட வழங்கப்பட்ட அனுமதி

பி.சா.ஆ.15 - என் பெயரிலும், எனது மனைவியின் பெயரிலும் கடன் பெறுவதற்கு 2ம் பிரதிவாதி உத்தரவிட்ட கடிதத்தின் நகல் (மேற்படி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யாததால் வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்ததால், ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)

பி.சா.ஆ.16 - எனது பெயரில் உள்ள இந்தியன் வங்கி, கிழக்கு வெளி வீதி கிளையின் கணக்கு புத்தகம்

பி.சா.ஆ.17 வரிசை - ரெப்கோ ஹோம் பைனான்ஸ்-க்கு நான் கடனை திருப்பி செலுத்தியதற்கான இரசீதுகள் (எண்ணிக்கையில் 21)

பி.சா.ஆ.18 - எனது மனைவி 2ம் பிரதிவாதி வங்கிக்கு 03.03.2011ம் தேதியில் கொடுத்த உறுதிமொழி கடிதம் (மேற்படி ஆவணம் நோட்டரி பப்ளிக் Attest செய்யாததால் ஆட்சேபணை தெரிவித்ததால், ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)

1ம் பிரதிவாதி தரப்பில் மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் முதல்விசாரணை இத்துடன் நிறுத்தம் செய்யப்படுகிறது.

ஒப்பம் /-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

Sd./-. J.TAMILARASI,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.